Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    மார்கழி 25    (09-01-1992)    வியாழக்கிழமை    ஓசை: 325

## புதிய நடைமுறையால் பெண் நோயாளர் அவதி

யாழ்.போதனா வைத்தியசாலையில் பெண் வெளி நோயாளரைப் பார்வையிடுவது மட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நாளாந்தம் ஐந்நூறுக்கும் மேற்பட்ட பெண்நோயாளர்கள் திரும்பிச்செல்லவேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது. மேற்படி வைத்திய சாலையில் இதுவரைகாலமும் தினமும் ஆயிரக்கணக்கான வெளிநோயாளர்கள் சிகிச்சைபெற்று வந்தது தெரிந்ததே. கடந்த டிசம்பர் ஐந்தாம் திகதி முதல் பெண் டாக்டர் ஒருவரால் நம்பர் திட்டம் அறிமுகப் படுத்தப் பட்டதைத் தொடர்ந்து நாளாந்தம் காலையில் இருநூறு பெண் நோயா (4ஆம் பக்கம் பார்க்க)

# அரசு, எதிர்க் கட்சிகள் ஆதரவுடன்

# தமிழருக்கு முழு சுயாட்சி அமைப்பு

## புலிகளுடன் பேசுவதற்கு இதுவே வழி என்கிறார்இ.தொ.கா.செயலர் செல்லச்சாமி

(கொழும்பு)

''அரசாங்கமும் எதிர்க்கட்சிகளுமாக இணைந்து தமிழ் மக்களுக்கென ஒரு முழுமையான சுயாட்சித் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அப்படியானதொரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால்தான் விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்க முடியும்'' இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகமும், கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற தெரிவுக்குழுவும் சர்வகட்சி மாநாட்டு பிரதிநிதிகளுமாகச் சேர்ந்து காலதாமதமின்றி ஒரு உருப்படியான சுயாட்சித் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும் திரு. செல்லச்சாமி வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்ற தெரிவுக்குழு நாளையும் மற்றும் சர்வகட்சி மாநாடு ஜனவரி 21 ஆம் திகதியும் கூடவுள்ளது. தொண்டமான் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்தை பாராளுமன்ற தெரிவுக்குழு ஆலோசனைக்கெடுத்து அரசில் மக்களின் பங்களிப்பை உண்மையாக்க வகைசெய்யும் படி செல்லச்சாமி கேட்டுக் கொண்டார்.

மக்கள் அரசின் செயல் முறைகளில் தமதுபங்களிப்பை வழங்கவேண்டும் என்ற விடயத்தில் அனைத்துக் கட்சிகளும் குழுக்களும் ஒத்தகருத்தைக் கொண்டிருக்கின்றன. மக்களுடன் பிரத்தியேகமான தொடர்புடைய ஆட்சிஅமைப் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## தொண்டா புலிகளுடன்பேச ஆணை வேண்டும்

### - செல்லச்சாமி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் தொண்டமானுக்கு ஆணை தேவையென இ. தொ. காவின் செயலாளரும், ராஜாங்க அமைச்சருமாகிய செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் ஹேரத்

(மணிலா)

டில்லியில் பேச்சுகளை நடாத்தி முடித்த சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் சென்னை சென்றுள்ளார்.

இவர் சென்னை நகரில் தமிழ்நாட்டில் தங்கியுள்ள ஈழத்தமிழர் குறித்து பேச்சுகளை நடாத்தினார்.

## தமிழகம் வந்தோர் ஓர் இலட்சம்

(சென்னை)

காவிரி நீர்ப்பிரச்சினை காரணமாக கர்நாடகத்தில் இருந்து இதுவரை ஓர் இலட்சத்து அறுநூற்றித் தொண்ணுற்று நான்கு தமிழர்கள் தமிழகத்திற்கு வந்துள்ளனர் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

## 'போரை நிறுத்துங்கள் காலம் வந்துவிட்டது'

(கொழும்பு)

உள்நாட்டு போருக்கு அமைதித் தீர்வு காணும் காலம் வந்துவிட்டது அதற்காக அனைவரும் பாடுபடவேண்டும் உள்நாட்டுப் போரில் ஈடுபடும் சகலரும் போரை நிறுத்தி அமைதிக்கான தீர்வை அனுமதிக்குமாறு இலங்கை உலக ஒற்றுமை ஒருங்கிணையம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

பல இனமத தலைவர்களையும் சமுதாயத்தில் முக்கிய பிரமுகர்களையும் கொண்ட இவ்வமைப்பு யார்தோற்றாலும் வென்றாலும் அவர்கள் அனைவரும் இலங்கையரே எனவே இனப்பூசலுக்கு முற்று (4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழர் தொடர்ந்தும் கைது

(திருமலை)

திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த ஐந்தாம் திகதி உப்பூரல் தமிழ் கிராமத்தை சுற்றிவளைத்து ஒருவரை கைது செய்து முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

கனகசூரியன் மயில்வாகனம் என்பவரே கைது செய்யப்பட்டவர். மேலும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இதே கிராமத்தில் சம்பூர் ஐந்தாம் வட்டாரத்தை சேர்ந்த செம்பு உடையார் விசுவையா வட்டாரத்தை சேர்ந்த செல்லையா சிறீபத்மநாதன் (வயது 33, 5 பிள்ளைகளின் தந்தை) ஆகிய இருவரையும் கைது செய்து முகாம் கொண்டுசென்றனர்.

## சூடாநாட்டின்மீது தாக்குதல்; இம்மாத இறுதியில் நிகழலாம்

### கேணல்முனசிங்க

(கொழும்பு)

புயலுக்கு முந்திய அமைதியே தற்போதய அமைதி என ...ளருக்கு அளித்த ஒரு பேட்டியின் போதே இவ்வாறு கூறினார்.

...தாக்குதலை எதிர்பார்க்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

## கடற்படை படகு மீது புலிகள் மோட்டோர் தாக்கு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைக் கடற் பகுதியில் ரோந்து சென்ற ... தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தின்போது பீரங்கிப்படகில் சென்று கொண்டிருந்த

## என்கிறார் இ.தொ.கா.செயலர் செல்லச்சாமி

(கொழும்பு)

''அரசாங்கமும் எதிர்க்கட்சிகளுமாக இணைந்து தமிழ் மக்களுக்கென ஒரு முழுமையான சுயாட்சித் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அப்படியானதொரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால்தான் விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்க முடியும்'' இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகமும், கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற தெரிவுக்குழுவும் சர்வகட்சி மாநாட்டு பிரதிநிதிகளுமாகச் சேர்ந்து காலதாமதமின்றி ஒரு உருப்படியான சுயாட்சித் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும் திரு. செல்லச்சாமி வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்ற தெரிவுக்குழு நாளையும் மற்றும் சர்வகட்சி மாநாடு ஜனவரி 21 ஆம் திகதியும் கூடவுள்ளது. தொண்டமான் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்தை பாராளுமன்ற தெரிவுக்குழு ஆலோசனைக்கெடுத்து அரசில் மக்களின் பங்களிப்பை உண்மையாக்க வகைசெய்யும் படி செல்லச்சாமி கேட்டுக் கொண்டார்.

மக்கள் அரசின் செயல் முறைகளில் தமதுபங்களிப்பை வழங்கவேண்டும் என்ற விடயத்தில் அனைத்துக் கட்சிகளும் குழுக்களும் ஒத்தகருத்தைக் கொண்டிருக்கின்றன. மக்களுடன் பிரத்தியேகமான தொடர்புடைய ஆட்சிஅமைப்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## சுடாநாட்டின்மீது தாக்குதல்; இம்மாத இறுதியில் நிகழலாம்

### கேணல்முனசிங்க

(கொழும்பு)

புயலுக்கு முந்திய அமைதியே தற்போதய அமைதி என கேணல் முனசிங்க கூறியிருக்கிறார். நேற்று பத்திரிகையாளருக்கு அளித்த ஒரு பேட்டியின் போதே இவ்வாறு கூறினார்.

மேலும் இம்மாத இறுதியில் இராணுவத்தின் உற்சாகமான தாக்குதலை எதிர்பார்க்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் சமாதான திட்டத்

(3ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிற்கு பொருள்கள் சில நாட்களில் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்திப்பொருள்களை கப்பல்மூலம் கொழும்பிற்குஅனுப்புவது தொடர்பான நடைமுறைகள் பற்றி சில நாட்களில் தெளிவான விளக்கம் ஒன்றை விடுக்க இருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். இது தொடர்பான செய்தி ஒன்று அண்மையில் ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்தது தெரிந்ததே.

தற்போது இவற்றை அனுப்புவது தொடர்பாக தான் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஒத்துழைப்புடன் மின்சாரதிருத்த வேலைகள்?

(கொழும்பு)

வவுனியாவிற்கு வடக்கே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிறிலங்கா இராணுவ அனுமதியுடன் விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்புடன் மின்சார வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று எரிசக்தி மின்சக்தி அமைச்சர் சந்திரா பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடபகுதியில் நடைபெற்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளைஉ.அ.அபிரிவு மீட்புநிதி செலுத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை உதவி அ.அ. பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து வேறுஇடங்களில் வதிவோரிடமிருந்து வரும் சனிக்கிழமை 11 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் முற்பகல் 10.00 மணிவரை மல்லாகம் மகா வித்தியாலயத்தில் தமிழீழ

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணை வேண்டும்

### - செல்லச்சாமி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் தொண்டமானுக்கு ஆணை தேவையென இ. தொ. காவின் செயலாளரும், ராஜாங்க அமைச்சருமாகிய செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

(சென்னை)

காவிரி நீர்ப்பிரச்சினை காரணமாக கர்நாடகத்தில் இருந்து இதுவரை ஓர் இலட்சத்து அறுநூற்றித் தொண்ணூற்று நான்கு தமிழர்கள் தமிழகத்திற்கு வந்துள்ளனர் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

## 'போரை நிறுத்துங்கள் காலம் வந்துவிட்டது'

(கொழும்பு)

உள்நாட்டு போருக்கு அமைதித் தீர்வு காணும் காலம் வந்துவிட்டது அதற்காக அனைவரும் பாடுபடவேண்டும் உள்நாட்டுப் போரில் ஈடுபடும் சகலரும் போரை நிறுத்தி அமைதிக்கான தீர்வை அனுமதிக்குமாறு இலங்கை உலக ஒற்றுமை ஒருங்கிணையம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

பல இனமத தலைவர்களையும் சமுதாயத்தில் முக்கிய பிரமுகர்களையும் கொண்ட இவ்வமைப்பு யார்தோற்றாலும் வென்றாலும் அவர்கள் அனைவரும் இலங்கையரே எனவே இனப்பூசலுக்கு முற்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழர் தொடர்ந்தும் கைது

(திருமலை)

திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த ஐந்தாம் திகதி உப்பூரல் தமிழ் கிராமத்தை சுற்றி வளைத்து ஒருவரை கைது செய்து முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

கனகசூரியன் மயில்வாகனம் என்பவரே கைது செய்யப்பட்டவர். மேலும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இதே கிராமத்தில் சம்பூர் ஐந்தாம் வட்டாரத்தை சேர்ந்த செம்பு உடையார் விசுவையா (வயது 50, இவர் 7 பிள்ளைகளின் தந்தையார்) ஆறாம் வட்டாரத்தை சேர்ந்த செல்லையா சிறீபத்மநாதன் (வயது 33, 5 பிள்ளைகளின் தந்தை) ஆகிய இருவரையும் கைது செய்து முகாம் கொண்டுசென்றனர்.

## கடற்படை படகு மீது புலிகள் மோட்டோர் தாக்கு

(யழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைக் கடற் பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினர்மீதுவிடுதலைப்புலிகள்மோட்டோர்குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தின்போது பீரங்கிப்படகில் சென்று கொண்டிருந்த கடற்படையினர்மீது சிறியரக படகில் இக்கடற்பகுதிக்குள் திடீரெனப்புகுந்த விடுதலைப் புலிகள் மோட்டோர் குண்டுத் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலையடுத்து கடற்படையினர் தப்பி ஓடிவிட்டனர். படையினருக்கு ஏற்பட்ட சேதம்பற்றி தகவல் எதுவும் அறியமுடியவில்லை. அதே வேளை நேற்று இரவு முழுவதும் படையினரால் இக்கடற் பகுதியில் ''பராலைற்'' அடிக்கப்பட்டது.

## இரு காவலரண்கள் அழிப்பு; மூன்று இராணுவத்தினர் பலி

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டம் ஒலுப்புலம் வீதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவதொடர் காவல் அரண்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 11.20 மணியளவில் நடாத்தப்பட்ட இத்திடீர்த் தாக்குதலினால் சிறிலங்கா இராணுவத்தினரது இரண்டு காவல் அரண்கள் முற்றாக தாக்கி அழிக்கப்பட்டன.

காயமடைந்த பல இராணுவத்தினர் தப்பி ஓடி விட்டனர். ஏனைய சில காவல் அரண்களில் இருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

சுமார் 5 நிமிடங்கள் மட்டும் நடைபெற்ற இத்தாக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா புதுக்குளத்தில் 100 தமிழர் இராணு. கைது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள புதுக்குளம் என்ற இடத்தில் இருந்து சுமார் 100 அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

நேற்று அதிகாலை 6.00 மணியளவில் மறக்காரம்பளை புதுவீதியில் இருந்து கிளையாற்றோரமாக முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் புதுக்குளம் சந்தியை சுற்றிவளைத்தனர். இச் சந்திப் பகுதியில் இருந்து சுமார் 100 அப்பாவித்தமிழ் மக்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மெய்க் காவலர் மோதல்

(கல்முனை)

வாணிபதுறை அமைச்சரின் தொகுதி மெய்க்காவலரும் எதிர்க்கட்சி எம். பி. மெய்க்காவலரும் கல்முனையில் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டனர். ஒருவர்படுகாயமுற்றார்

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச் சம்பவம் இடம் பெற்றது.

இதில் காயமுற்ற வாணிபத் துறை அமைச்சரின் பாதுகாவலர் அம்பாறை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# தமிழீழ விடுதலைப் போரின் வரலாற்றை நிறைவேற்றும் பணியில்

வீரஜனனம் 04 — 02 — 1971



வீரச் சாவு 07 — 12 — 1991

# மேஜர் இளங்கோ

ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலைப் போர்ஆகிய சத்திய வேள்வியில் நித்தமும் தம்மை ஆகுதியாக்கிக்கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற்றோடு தான் சரிந்து கொண்டிருந்த தமிழினத்தின் வரலாறு நிமிர்வை நோக்கி திசையமைவு கொள்கிறது.

அகண்ட பல சாம்ராட்சியங்கள் கண்டு சிறந்தோங்கி வாழ்ந்த தமிழினம் அடங்கி ஒடுங்கி சொந்த மண்ணிலேயே இரண்டாந்தரப்பிரஜையாகஆகி உரிமைகள் இழந்து வாழும் இறுதிக் கீழ் நிலைவரை வரலாற்றுச் சரிவு கண்டது. இந்த தர்ம யுத்தத்தில் தம்மை முழுமையாகத் தற்கொடை செய்த மாவீரர்களின் முழுமையான பங்காற்றலில் இருந்துதான் தமிழினத்தின் வீழ்ந்த மேன்மை வானளாவு உயர்ந்து நிற்கின்றது.

இந்த உன்னத மேன்மையை தமிழீழதேசிய இனத்திற்கு உருவாக்கிட தம்மைமுழுமையாகத்தந்தமாவீரர்களில் மேஜர் இளங்கோவும் ஒருவர்.

வடமராட்சியின் தாக்குதற் படைப் பிரிவுத் தளபதியாக இருந்து 07-12-1991 அன்றுவளலாயில் வீரச்சாவு கண்ட இவர் தமிழீழ விடுதலைப் போரில் ஆற்றிய சாதனைகள் பல.

இந்த மேஜர் இளங்கோ கரவெட்டியில் உள்ள கப்புது என்னும் இடத்தைச் சேர்ந்தவர் இவரின் சொந்தப் பெயர் வல்லிபுரம் மன்மதநாதன். வல்லிபுரம் தங்கம்மா ஆகிய இருவருக்கும் இவர் ஐந்தாவது மகனாவார்.

இவர் படிப்பில் சிறந்து விளங்கினார். விளையாட்டிலும், கலை ஈடுபாட்டிலும் இவர்மேலோங்கி நின்றார். இவற்றுடன் கவிதை, கட்டுரை எழுதும் ஆர்வமும் கொண்டிருந்தார்.

இவரின் பண்பு நிலை மேன்மையானது. மற்றவர்களைப் பற்றிச்சிந்திக்கும் தன்மை கொண்டவர். இவர் அதனால் தான் போலும் தன்னுடைய தான் சிறந்து விளங்கிய சகலதிலும் தனது ஈடுபாட்டை முற்றாகத் தவிர்த்துக் கொண்டார். தமிழினத்தின் அவலத்தை அகற்றிட நடக்கும் தமிழீழ விடுதலைப் போரில் தன்னை இணைத்துக்கொண்டார்.

போர்ப் பயிற்சி பெற்ற இவர் களம் பல கண்டவர். வடமாராட்சியில் நடந்த ஒபரேசன் லிபரேசன் நடவடிக்கையின் போதும் எதிரிக்கு எதிராக தனது முனைப்பான தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டவர்.

இந்தியப் படை இங்கு வந்தது. அப்படையோடும் இவர் அஞ்சாது மோதினார். ஓர் இக்கட்டான சூழ் நிலையில் இவரை இந்தியப்படை பிடித்து காங்கேசன்துறை தடைமுகாமில் தடுத்து வைத்து விடுகின்றனர். அங்கும் இவர் தன்னுடைய இலட்சிய முனையின் கூர் ஒடியாமலே இருந்தார்.

அத்தடைமுகாமில் உள்ள இந்தியப்படை வீரர்கள் அவரை அடிக்க முற்பட்ட போதெல்லாம் இவர் ஒரு மெல்லிய சிரிப்பை வீசி ஏளனப்படுத்தி விடுவார். அதனால் இவர் பல தண்டனைகளையும் அங்கு பெற்றதுண்டு.

ஒருமுறை அங்குள்ளஒருகப்டன் இவருக்குச் சொன்னான்: இலங்கை அரசிடம் இருந்து நாம் பெற்றுத்தரும் இந்த மாகாண ஆட்சியை நீங்கள் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்று. மேஜர் இளங்கோ அப்போது அவன் மீது ஒரு விறைப்பான பார்வையைச் செலுத்திவிட்டுத் திரும்பி தன்னவர்களிடம் (அம்முகாமில் தடுத்து வைக்கப்பட்ட மற்ற இளைஞர்களிடம்) சொன்னார். ''ஆற்றையேனும் அதிகார சகதிக்குள் வல்லாதிக்கப்பூதம் பதித்த கால் தடத்தில் அடங்கிக்கிடக்க நாம் ஒன்றும் சேற்று நீர்களல்ல. நாங்கள் சுதந்திர வேட்கை கொண்டு அலை புரட்டி ஒலி எழுப்பி அடித்துப் பாயும் ஆற்று நீர் போன்றவர்கள்'' இதை விறைப்போடும் முறைப் போடும் சொன்னார்.

அந்த கப்டன் இவரை இழுத்துச் சென்று இருட்டறையில் போட்டான். இருட்டறையில் இருந்து மூன்று நாட்களின் பின் மீண்டார் அப்போதும் மேஜர் இளங்கோ தன் முனைப்பில் முன்னேற்றம் குறையாமலே இருந்தார்.

அங்கிருந்து விடுதலையானார். இவரின் சரியான நிலை இவரை மீண்டும் போர்ப்பணியில் ஈடுபடவகை செய்தது.

1990 ஆம் ஆண்டில் ஒரு யுத்த நிறுத்த பேச்சுவார்த்தையின் பின் ஆரம்பமான சிறிலங்கா படையினருடனான யுத்தத்தில் அதி முக்கியத்துவம். வாய்ந்த களங்களிலெல்லாம் அவர் பங்கு கொண்டார்.

நுட்பமான பார்வையும் விவேக திறனும் கொண்டவர் மேஜர் இளங்கோ. எதிரிக்கு எதிராக எப்பவும் நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டுமென எண்ணம்கொண்டவர். அதனால் இவர் பங்கு கொண்ட எல்லாக் களங்களிலும் தனது உயர் வல்லமையைக் காட்டிப்போராடினார்.

இவர் கண்ட களங்களில் சில ....

## கோட்டை

தமிழினத்தின் அடிமைத்தனத்தின் மிக வெளிச்சமாக அடையாளமிட்டுக்காட்டி நின்ற இக் கோட்டை முகாமை தாக்கும் நடவடிக்கையிலும் இவர்பங்கு கொண்டு சாதனை புரிந்தார். கோட்டை முகாமை வெற்றி கொள்ள வைத்த இறுதிச் சண்டையின் தன்மை அமையவகை செய்த அத்தனை நடவடிக்கையிலும் இவர் நின்றார். செயற்பட்டார்.

## மன்னார் பரப்புக்கடந்தான்

மன்னார் பரப்புக்கடந்தானில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலிலும் பெரும் முனைப்பான பங்கை ஆற்றி நின்றார்

## சிலாவத்துறை

கடற்படையின் நேரடி உதவிகளை பெறக்கூடிய வகையில் அடைந்துள்ள சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதலிலும் மேஜர் இளங்கோ பங்குகொண்டு தன் சாதனை வரலாற்றை உயர்த்தினார்.

## காரைநகர்

காரைநகர் கடற்படை முகாமை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்து நின்ற காலத்தில் அம்முகாம் மீது மேற்கொண்ட அத்தனை வெற்றிச் சண்டைகளிலும் இவர் நின்றார் போர்ப்பணியாற்றினார்.

## ஆனையிறவுச் சமர்

ஆனையிறவுத் தளத்தின்மீது மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின்போது சுற்றுலா விடுதி முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. அந்த சுற்றுலா விடுதிக்குள் முதலில் நுழைந்தவர்கள் மேஜர் இளங்கோவின் அணியினரே. அங்கே தொடர்ந்து நடந்த சண்டைகளிலும் இவர் தனது முத்திரையைப் பதித்துப் போராடினார். இவர் காயப்பட்ட நிலையிலும் தொலைத் தொடர்பு சாதனத்தினூடு அறிவிக்க முடியாததும் எதிரிக்குக் கிடைக்கக் கூடாததுமான முக்கிய செய்தியொன்றை எதிரியின் முகாமிற்குள் நுழைந்து நின்ற தம்மவர்களிடம் தானே நேரடியாகச் சென்று தனது கடமையை முடித்து வெற்றிகரமாகத் திரும்பினார். எதிரிக்கு எதிரான நடவடிக்கைகளில் பெருநாட்டம் காட்டினார்.

வடமராட்சியின் தாக்குதற் படைப்பிரிவுத் தளபதிகளாக இருந்து சிலாவத்துறையில் வீரச்சாவடைந்த மேஜர் ரஞ்சன் சித்தப்பா, ஆனையிறவு ஆ. க. வெ சமரில் வீரச்சாவடைந்த மேஜர் கணேஸ், மணலாற்றில் வீரச்சாவடைந்த மேஜர் மேகன் ஆகிய தளபதிகளுக்கு அடுத்ததாக வடமராட்சியின் தாக்குதற் படைப் பிரிவுத் தளபதியாக மேஜர் இளங்கோ நியமிக்கப்பட்டார். தன் பொறுப்பின் பணியை சிறப்பாக ஆற்றினார்.

இறுதியாக வளலாயில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் இவர் வீரச்சாவு கண்டார். இவரின் இலட்சிய வீச்சு இன்று எல்லோர் நெஞ்சங்களிலும் கனக்கின்றது.

இந்த வளலாய் சண்டையில் 2 ஆம் லெப்டினன் சின்னத்தம் பி (கணபதிப்பிள்ளை - சண்முகநாதன், புலோலி மேற்கு பருத்தித்துறை) வீரவேங்கை இன்பராஜ் (தங்கராஜா ஜெயசீலன் - அந்திரான், கரணவாய் மேற்கு) வீரவேங்கை அருள்நாதன் (இரத்தினம் உதயகுமார் - தொண்டமானாறு) ஆகியோரும் எதிரியுடன் நேரடியாக மோதி வீரச்சாவு கண்டனர்.

தமிழீழ விடுதலைப் போரின் வரலாற்றை நிறைவேற்றும் பணியில் இவர்களும் தமது முழுமையான பங்களிப்பைச் செய்துள்ளனர். இந்த மாவீரர்களின் இலட்சியக் கனவுகளை நிறைவேற்றிட ஒன்றிணைந்து போராடுவது இன்றைய வரலாற்றுக் கடமை. அதை நிறைவேற்றிட அனைவரும் ... .. ... ... ...

(சி/3755) - அமரா

# நினைவு கூருகின்றோம்

1992-01-09





இதே சம்பவத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான பொது மக்கள்

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

★ **பவான்** [சின்னையா மகேந்திரன் - கதிரவெளி, வாகரை]

1988 ஆம் ஆண்டு காரைநகரில் இந்தியப்படையினரின் முற்றுகையின் போது

# மேஜர் இளங்கோ

பற்றிச்சிந்திக்கும் தன்மை கொண்டவர். இவர் அதனால் தான் போலும் தன்னுடைய தான் சிறந்து விளங்கிய சகலதிலும் தனது ஈடுபாட்டை முற்றாகத் தவிர்த்துக் கொண்டார். தமிழினத்தின் அவலத்தை அகற்றிட நடக்கும் தமிழீழ விடுதலைப் போரில் தன்னை இணைத்துக்கொண்டார்.

போர்ப் பயிற்சி பெற்ற இவர் களம் பல கண்டவர். வடமராட்சியில் நடந்த ஒபரேசன் லிபரேசன் நடவடிக்கையின் போதும் எதிரிக்கு எதிராக தனது முனைப்பான தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டவர்.

இந்தியப் படை இங்கு வந்தது. அப்படையோடும் இவர் அஞ்சாது மோதினார். ஓர் இக் கட்டான சூழ் நிலையில் இவரை இந்தியப்படை பிடித்து காங்கேசன்துறை தடைமுகாமில் தடுத்து வைத்து விடுகின்றனர். அங்கும் இவர் தன்னுடைய இலட்சிய முனையின் கூர் ஒடியாமலே இருந்தார்.

அத்தடைமுகாமில் உள்ள இந்தியப்படை வீரர்கள் அவரை அடிக்க முற்பட்ட போதெல்லாம் இவர் ஒரு மெல்லிய சிரிப்பை வீசி ஏளனப்படுத்தி விடுவார். அதனால் இவர் பல தண்டனைகளையும் அங்கு பெற்றதுண்டு.

ஒருமுறை அங்குள்ள ஒருகப்டன் இவருக்குச் சொன்னான்: இலங்கை அரசிடம் இருந்து நாம் பெற்றுத்தரும் இந்த மாகாண ஆட்சியை நீங்கள் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்று. மேஜர் இளங்கோ அப்போது அவன் மீது ஒரு விறைப்பான பார்வையைச் செலுத்திவிட்டுத் திரும்பி தன்னவர்களிடம் (அம்முகாமில் தடுத்து வைக்கப்பட்ட மற்ற இளைஞர்களிடம்) சொன்னார். ''ஆற்றையேனும் அதிகார சகதிக்குள் வல்லாதிக்கப்பூதம் பதித்த கால் தடத்தில் அடங்கிக்கிடக்க நாம் ஒன்றும் சேற்று நீர்களல்ல. நாங்கள் சுதந்திர வேட்கை கொண்டு அலை புரட்டி ஒலி எழுப்பி அடித்துப் பாயும் ஆற்று நீர் போன்றவர்கள்'' இதை விறைப்போடும் முறைப் போடும் சொன்னார்.

அந்த கப்டன் இவரை இழுத்துச் சென்று இருட்டறையில் போட்டான். இருட்டறையில் இருந்து மூன்று நாட்களின் பின் மீண்டார் அப்போதும் மேஜர் இளங்கோ தன் முனைப்பில் முன்னேற்றம் குறையாமலே இருந்தார்.

அங்கிருந்து விடுதலையானார். இவரின் சரியான நிலை இவரை மீண்டும் போர்ப்பணியில் ஈடுபடவகை செய்தது.

1990 ஆம் ஆண்டில் ஒரு யுத்த நிறுத்த பேச்சுவார்த்தையின் பின் ஆரம்பமான சிறிலங்கா படையினருடனான யுத்தத்தில் அதி முக்கியத்துவம் வாய்ந்த களங்களிலெல்லாம் அவர் பங்கு கொண்டார்.

நுட்பமான பார்வையும் விவேக திறனும் கொண்டவர் மேஜர் இளங்கோ. எதிரிக்கு எதிராக எப்பவும் நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டுமென எண்ணம்கொண்டவர். அதனால் இவர் பங்கு கொண்ட எல்லாக் களங்களிலும் தனது உயர் வல்லமையைக் காட்டிப்போராடினார்.

இவர் கண்ட களங்களில் சில ....

**கோட்டை**

தமிழினத்தின் அடிமைத்தனத்தின் மிக வெளிச்சமாக அடையாளமிட்டுக்காட்டி நின்ற இக் கோட்டை முகாமை தாக்கும் நடவடிக்கையிலும் இவர்பங்கு கொண்டு சாதனையோடு அறிவிக்க முடியாததும் எதிரிக்குக் கிடைக்கக் கூடாததுமான முக்கிய செய்தியொன்றை எதிரியின் முகாமிற்குள் நுழைந்து நின்ற தம்மவர்களிடம் தானே நேரடியாகச் சென்று தனது கடமையை முடித்து வெற்றிகரமாகத் திரும்பினார். எதிரிக்கு எதிரான நடவடிக்கைகளில் பெரு நாட்டம் காட்டினார்.

வடமராட்சியின் தாக்குதற் படைப்பிரிவுத் தளபதிகளாக இருந்து சிலாவத்துறையில் வீரச்சாவடைந்த மேஜர் ரஞ்சன் சித்தப்பா, ஆனையிறவு ஆ. க. வெ சமரில் வீரச்சாவடைந்த மேஜர் கணேஸ், மணலாற்றில் வீரச்சாவடைந்த மேஜர் மேகன் ஆகிய தளபதிகளுக்கு அடுத்ததாக வடமராட்சியின் தாக்குதற் படைப் பிரிவுத் தளபதியாக மேஜர் இளங்கோ நியமிக்கப்பட்டார். தன் பொறுப்பின் பணியை சிறப்பாக ஆற்றினார்.

இறுதியாக வளலாயில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் இவர் வீரச்சாவு கண்டார். இவரின் இலட்சிய வீச்சு இன்று எல்லோர் நெஞ்சங்களிலும் கனக்கின்றது.

இந்த வளலாய் சண்டையில் 2 ஆம் லெப்டினன் சின்னத்தம்பி (கணபதிப்பிள்ளை - சண்முகநாதன், புலோலி மேற்கு பருத்தித்துறை) வீரவேங்கை இன்பராஜ் (தங்கராஜா ஜெயசீலன் - அந்திரான், கரணவாய் மேற்கு) வீரவேங்கை அருள்நாதன் (இரத்தினம் உதயகுமார் - தொண்டமானாறு) ஆகியோரும் எதிரியுடன் நேரடியாக மோதி வீரச்சாவு கண்டனர்.


தமிழீழ விடுதலைப் போரின் வரலாற்றை நிறைவேற்றும் பணியில் இவர்களும் தமது முழுமையான பங்களிப்பைச் செய்துள்ளனர். இந்த மாவீரர்களின் இலட்சியக் கனவுகளை நிறைவேற்றிட ஒன்றிணைந்து போராடுவது இன்றைய வரலாற்றுக் கடமை. அதை நிறைவேற்றிட அனைவரும் ... ... ... ...

(சி/3755)

\- அமரா

## நினைவு கூருகின்றோம்


### 1992-01-09



கப்டன் பண்டிதர்

லெப். கேணல்

பாண்டியன்



*1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் ஆவரங்காலில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய*

**கப்டன் பண்டிதர் / இளங்கோ** *[சின்னத்துரை ரவீந்திரன் - பாரதிவீதி, கம்பர்மலை, வல்வெட்டித்துறை]*

**நேரு** *[செல்லையா தில்லைச்சந்திரன் - இல. 387, நாவலர்வீதி, அரியாலை]*

**ரவி / ராஜீவ்** *[சோமசுந்தரம் பிரதாபன் - இல. 36, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு]*

**சாமி** *[ஆறுமுகம் தவரத்தினம் - சிவன்வீதி, ஆவரங்கால், புத்தூர்]*

**தவம்** *[நடேசு தவராசா - அச்சுவேலி தெற்கு.]*

**சிவா** *[சிவகுரு சிவேந்திரன் - அச்சுவேலி தெற்கு]*

இதே சம்பவத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான பொது மக்கள்

*1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய*

★ **பவான்** *[சின்னையா மகேந்திரன் - கதிரவெளி, வாகரை]*

*1988 ஆம் ஆண்டு காரைநகரில் இந்தியப்படையினரின் முற்றுகையின் போது தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய*

**லெப். கேணல் பாண்டியன் குட்டி** *[செல்லத்துரை சிறிகரன் - சிறிகரன் வீதி, பிரம்படி, கொக்குவில்)*

*1989 ஆம் ஆண்டு பண்டத்தரிப்பில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து அடித்துக் கொல்லப்பட்ட*

**பேபி** *[ஆறுமுகம் குணசேகரம் - தொல்புரம் மத்தி, சுழிபுரம்]*

*1990 ஆம் ஆண்டு அரியாலையில் தேசத்துரோகிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய*

**மது** *[எட்வின் கொறின் - கோண்டாவில்]*

*புலோப்பளையில் தேசத்துரோகிகள் மற்றும் இந்தியப்படையினருடனானமோதலில் வீரச்சாவெய்திய*

**லெப். பாக்கி** *[பரஞ்சோதி நந்தகுமார் - நாவற்குழி]*

**லெப். விக்னா** *[யாழ்ப்பாணம்]*

**2 ஆம் லெப். ஜெகன்** *[கதிர்காமத் தம்பி அகிலன் - எழுதுமட்டுவாள்]*

அக்கரைப்பற்றில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு பின்னர் பேருந்து நிலையத்தில் சடலங்களாக மீட்கப்பட்ட 2 தமிழ் இளைஞர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் பவான் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

(சி-3746)

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

## சிந்தனைக்கு

உயர்ந்த இலட்சியத்திற்காக உயிர் துறப்போர் ஒரு நாளும் தோற்பதில்லை.

— பைரன் பிரபு

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 09-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# விரும்பியல்ல, தவிர்க்கமுடியாதது

வடக்கு-கிழக்கு இணைந்த, அதிகாரங்களுடன் கூடிய ஓர் அமைப்பே இனப்பிரச்சினைக்குத் தீர்வாகும் என இன்று பொதுவாகப் பேசப்படுகின்றது. அமைச்சர் தொண்டமான் அவ்வாறான ஒரு சுயாட்சித் திட்டத்தையே முன் வைத்தார். இந்திய தரப்பும் இதை ஒத்த ஓர் அதிகாரப் பரவலாக்கலை - ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில்-மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்தியுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின்தலைவரான மங்கள முனசிங்காவும் சமஷ்டி அமைப்பு முறை குறித்து சிங்கள மக்கள் சிந்தித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்நிலைப்பாடு குறித்து பல விமர்சனங்களும் கண்டனங்களும் உண்டு. பௌத்த சங்கங்கள், சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் என்பனவற்றிலிருந்தே இக் கண்டனங்கள் எழுந்துள்ளன. இக் கண்டனம் தெரிவிப்பவர்கள் யதார்த்த நிலையை உணராதவர்கள்.

1982ஆம் ஆண்டு மாவட்டசபை உருவாக்கப்பட்ட போதும் சரி, அதன் பின்னர் மாகாணசபை உருவாக்கப்பட்ட போதும் சரி; இப்பொழுதும் சரி, பௌத்த பீடங்களும் சிங்களப் பேரினவாத அமைப்புக்களும் கண்டனம் செய்தே வந்துள்ளன. கிளர்ச்சியில் ஈடுபட்டும் வந்தன. ஆனால், அரசியலின் வளர்ச்சிப் போக்கு நிற்கவில்லை. அதாவது அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு சிறிலங்கா அரசாங்கம் எப்பொழுதுமே தீர்வை முன்வைக்கவில்லை. மாறாக பிரச்சினைகள் வெடித்துக் கிளம்பியபோது அவற்றைத் தணிப்பதும், திசை திருப்புவதற்குமாக சிறிய சிறிய உரிமைகள் சட்டபூர்வமாக வழங்கப்பட்டன - நடைமுறையில் அதுவுமில்லை - இவ்வரிசையில் முன் வைக்கப்பட்டவையே மாவட்ட அபிவிருத்திச்சபைகளும் மாகாண சபையும் தற்பொழுது விவாதத்திற்கு உள்ளாகியிருக்கும் தன்னாட்சி / சுயாட்சி அமைப்பும் ஆகும்.

தற்பொழுதும் அதே நிலைதான். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி சமஷ்டி ஆட்சி முறைபற்றிச் சிங்கள ஆட்சியாளர்களைச் சிந்திக்க வைத்துள்ளது. இதைத் தவிர்ப்பதற்கு சிறிலங்கா ஆட்சியாளருக்கோ அன்றி இந்தியாவிற்கோ விருப்பம் இல்லாமலும் இல்லை. ஆனால், விடுதலைப் போராட்டத்தின் தீவிரம் இதனைத் தவிர்க்க முடியாதது ஆக்கியுள்ளது.

தவிர்க்க முடியாமல் இந்த நிலைக்கு அவர்களைத் தள்ளியது விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் கூடியதான போராட்டம். விடுதலைப் புலிகள் தமிழரின் தலைமைத்துவத்தை வளைந்து கொடுக்கும், ஏமாற்றுகளுக்கு உட்படக் கூடிய சக்திகளிடம் சென்றடையாமல் பாதுகாத்தமையே இவ்வளர்ச்சி நிலைக்குக் காரணமாகும்.

இந்நிலையில் தான் தற்பொழுது வடக்குகிழக்கு மாகாணங்களின் தன்னாட்சி/ சுயாட்சி பற்றிப் பேசுகின்றவர்கள் புலிகளை ஒதுக்கி பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படுகின்றனர் அதாவது விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பு நிறைந்த விடாப்பிடியான போராட்டம், தமிழீழத்தை சாத்தியமாக்கி விடும் என அவர்கள் அஞ்சுகின்றனர். உலகில் தேசிய இனங்களின் போராட்ட பரிணாம வளர்ச்சி புதிய அரசுகளை உருவாக்கியுள்ளமை இவர்களுக்கு திகிலைஏற்படுத்தியுள்ளதைக் கண்டுஅவர்கள் அஞ்சுகின்றார்கள்.

# மன்னார் மாவட்டத் தளபதி லெப்ரினன்ட் கேணல் வேணு

மன்னார் ஆண்டாங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரான்சிஸ் என்ற தமிழ்த் தந்தையின் தவப் புதல்வனே பிரான்சிஸ் றொபோட் சேவியர்.

இவர் தனது இளமைக் காலத்தை கல்வியிலேயே போக்கி வந்தார். க. பொ. த. உயர்தரக் கல்வியில் சித்தியடைந்து கல்வியை நிறுத்தி விட்டு, 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழினத்தின் விடுதலைக்காகவும், தமிழ் மண்ணின் விடிவிற்காகவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்தார். பிரான்சிஸ் றொபோட் சேவியர் இவரது இயற்பெயரை மாற்றி புனைபெயராக வேணுஎன்று அழைக்கப்பட்டார். இவர் முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேணல் விக்ரரின் அணியில் நின்று சில கண்ணிவெடித் தாக்குதல்களிலும், மன்னார் கோட்டை மீதான முற்றுகையிலும் பங்கு கொண்டார். பின் மன்னாரில் விடுதலைப் புலிகளின் பயிற்சிப் பாசறைகளில் மருத்துவத்தில் முக்கிய இடத்தை வகித்து வந்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்த காலப்பகுதியில் (1987 இல்) மன்னார் மாவட்ட இரண்டாவது தளபதியாக நியமிக்கப்பட்டார். மற்றும் மன்னாரில் நடைபெற்ற தேசத்துரோக இயக்கங்களுடனான மோதல்களிலும், இந்திய இராணுவத்தினருடனான மோதல்களிலும் பங்குபற்றி வந்தார்.

1990 இடைக் காலப்பகுதியில் தனது குழுக்களுக்கு தலைமை வகித்து யாழ் சென்றார்.

பின் இலங்கை இராணுவத்தினருடனான மோதல் ஆரம்பமாகி கஜுவத்தை முகாம் முற்றுகையின் பின் மன்னாருக்கு தனது குழுக்களுடன் வந்து கஜுவத்தை, முள்ளிக்குளம், சிலாவத்துறை பகுதியில் முன்னேறிய இராணுவத்தினருடனான நேரடி மோதல்களுக்கு தலைமை வகித்தார்.

பின் சிலாவத்துறை பகுதியில் நடந்த மோதலில் காயமடைந்து சிகிச்சைக்கு சென்று குணமாகி மீண்டும் மன்னார்



மாவட்டத்தில் தனது பணியை தொடர்ந்தார்.

கொண்டச்சியில் 50 இராணுவத்தினர் கொல்லப்பட்ட சமரிலும் சிலாவத்துறை முகாம் முற்றுகை முயற்சியிலும். வேப்பங்குளம் 26 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டசமரிலும் வங்காலை, தள்ளாடி, சிலாவத்துறை ஆகிய பகுதியில் முன்னேறிய இராணுவத்தினரை வழி மறித்து தாக்கியதிலும் தலைமை வகித்தார்.

பின் மன்னார் மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின் -

வங்காலை - நானாட்டான் இடையிலான கண்ணி வெடித் தாக்குதல்கள், தள்ளாடி - வங்காலை இடையிலான கண்ணி வெடித் தாக்குதல்களில் பங்கு கொண்டார்.

ஆனையிறவு சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த போது மன்னாரில்இராணுவத்தினரை திசை திரும்பும் முகமாக தள்ளாடியிலிருந்து சிறு நாவற்குளத்தை நோக்கி முன்னேறிய இராணுவத்தினரை வழி மறித்து தாக்கி வெற்றியும் பெற்றவர்.

வவுனியா - செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து மடுவை நோக்கி முன்னேறிய இராணுவத்தினரை தம்பனையில் வைத்து வழிமறித்து தாக்கிய இராணுவத்தைநிலை குலைய வைத்து பின் வாங்கிச் செல்ல வைத்தவர். பின் சிலாவத்துறையிலிருந்து வேப்பங்குளத்தை நோக்கி முன்னேறிய இராணுவத்தை வழிமறித்து தாக்கிவெற்றி பெற்றவர்.

இவரின் தலைமையில் நடைபெற்ற சில தாக்குதல்களில் மேஜர் குகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணி ஆகியோரும் இவருடன் இணைந்து மண் மீட்புக்காய்ப் போராடி வந்தனர்.

மன்னாரில் நடைபெற்ற முக்கிய தாக்குதல்களுக்கு தலைமை வகித்து இராணுவத்தின் ஆயுதங்களும், உடல்களும் மீட்டு பல வெற்றிகளை கண்டு வந்தவர் தான் மன்னார் மாவட்டத் தமிழ்த் தாய் ஈன்றெடுத்த மாவீரன் லெப். கேணல் வேணு ஆவார்.

# லிபியாவிற்கு எதிராக பொருளாதாரத் தடை?

(நியூயோர்க்)

லிபியாவிற்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்று அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகள் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றன என ஐ நா. செயலகத்திலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா பிரான்ஸைச் சேர்ந்த இரண்டு விமானங்கள் நொருங்கியதால் 441 பேர் கொல்லப்பட்டனர். இதில் லிபியா சம்பந்தப்பட்டுள்ளது என்று மேற்படி நாடுகள் குற்றஞ் சாட்டியே இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் இரண்டு விமானங்களிலும் குண்டு பொருத்தியதாகக் கூறப்படும் குற்றவாளிகளை லிபியா கையளிக்க வேண்டுமென்று மூன்று நாடுகளும் ஐ நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானமொன்றை கொண்டு வரவுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தக் கோரிக்கையை திரிப்போலி ஏற்றுக் கொள்ளாவிடில் லிபியா மீது பொருளாதாரத் தடை கொண்டு வரவும் திட்டமிட்டுள்ளன.

# வடக்கு கிழக்கு இணைப்பு; எதிர்த்துப் போராடுவேன்

## - ஊவா முதலமைச்சர்

முஸ்லிம்களின் விருப்பத்துக்கு மாறாகவடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இணைக்க முற்பட்டால் கிழக்கு முஸ்லிம்களுடன் ஊவா மக்களும் சேர்ந்து போராடுவர். நானே அப்போராட்டத்துக்குத் தலைமை தாங்குவேன் என ஊவா மாகாண முதலமைச்சர் பேசி சமரவீர கடந்த திங்களன்று சூளுரைத்தார்.

அவர் மேலும், தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் தீர்வுகளை அமுல் நடாத்த முடியாது பொது இணக்கத்துடனான தீர்வையே அமுல் நடாத்த முடியும் என்று ஜனாதிபதி கூறியிருப்பதை வரவேற்பதாகவும் கூறினார்.

ஊவா மாகாணத்தில்உள்ள சில்மியாபுரம் பள்ளிவாசல் தர்மகர்த்தா சபையினால் நிர்மாணிக்கப்பட்ட சூப்பர்மார்க்கெட்டைத் திறந்து வைத்து இடம் பெற்ற பொதுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

### புலிகளின்

வரும் மின்சார வேலைகள் தொடர்பாக தெரிவித்த மின்சார சபையின் தலைவர் என். ஏ. பெரேரா 'தற்போது மாங்குளம் வரையில் துரிதமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' என்று குறிப்பிட்டார்.

இதே நேரம் தீவுப்பகுதிகளுக்கு இன்னும் இரண்டு மாதங்களில் மின்சாரம் விநியோகிக்கப்படும் என்றும், இதற்கென ஏழு ஜெனரேட்டர்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### குடாநாட்டின்

துக்கும் தற்போதய இராணுவ நடவடிக்கைக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றும் கேணல் முனசிங்க கூறினார்.

இதேவேளை செய்தியாளர்களின் கருத்துப்படி கடந்த முதலாம் திகதிக்கு பின்புஎந்த வித பெரிய சண்டையும் நடைபெறவில்லை என்றும், இராணுவத்தின் பலத்த எதிர்ப்பை சமாளிக்கும் வகையில் விடுதலைப்புலிகளும் நல்ல பலநிலையிலேயே இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

### கொழும்பிற்கு

துடன் கலந்தாலோசித்த பின்பே இது பற்றிய விளக்கங்களை தரமுடியும் எனவும் அதன் பின்னர் ஏற்றுமதியாளர்கள் பொருள்களைகொழும்பிற்கு அனுப்புவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

### தெல்லிப்பளை

மீட்பு நிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படிபகுதியைச் சேர்ந்தோர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப்பிரிவினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# அரசாங்கத்தில் முஸ். காங்கிரஸ் இணைக்க தீவிர முயற்சி

(கொழும்பு)

சிறிலங்காஅரசாங்கத்துடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இணைந்து செயல்பட வைப்பதற்கு ஆளும் கட்சி வட்டாரங்களில் இப்பொழுது தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகமிகநம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரிய வருவ தாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் இந்த அழைப்பை ஏற்பதா இல்லையா என்பது பற்றி காங்கிரஸின் செயற்குழுவும் அரசியல் குழுவும் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன என்றும் அச்செய்திகள் கூறுகின்றன.

இந்த ஆராய்வின் பின் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்துகொள்வதாக முடிவெடுக்கும் இடத்து பாராளுமன்றத்தில் இக் கட்சிக்கு அமைச்சர் பதவிகளும் கிடைக்கலாம்எனவும் கூறப்படுகிறது.

இது இ. தொ, கா. கட்சி தற்போது ஐ.தே. கட்சியுடன் சேர்ந்து செயற்படுவதுபோல முஸ்லிம் காங்கிரஸும் செயற்படவேண்டி இருக்குமென்று பரவலாகதெரிவிக்கப்படும்.

## ஜப்பானில் ஜோஜ்புஷ் மயங்கி விழுந்தார்

(டோக்கியோ)

யப்பான் விஜயம்மேற்கொண்டிருந்த ஜோர்ஜ் புஷ் ஒரு கட்டத்தில் மயங்கி விழுந்தார். யப்பானிய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பேச்சுக்களைநடத்திவிட்டு வெளியே வரும்போது காருக்கு முன்னால் மயங்கி வீழ்ந்தார்.

இருந்த போதிலும் தன்னை சுதாகரித்துக் கொண்டுஎழுந்து ஜோர் புஷ் டோக்கியோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

---

உ
சிவமயம்

### யாழ்ப்பாணம், திருவண்ணை நகர்
### அருள்மிகு வாலாம்பிகா சமேத
### விசுவலிங்க வைத்தீசுவர சுவாமி
திருக்கோயில்
(வண்ணை சிவன் கோயில்)

## ஆலய பரிபாலன சபை ஆதரவில்

1. அருள்மிகு தையல் நாயகி பாலர் பாடசாலையும்.
2. அருள்மிகு தையல் நாயகி தையற்பயிற்சிநிலையமும் பயிற்சியும், அனுபவமிக்க ஆசிரியர்களால் நடாத்தப்படவிருப்பதால், புதிதாகச் சேர்ந்து படிக்கவும், பயிற்சிபெறவும் விரும்பும் மாணவர்கள் 15-01-92 புதன்கிழமைக்கு முன்னர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பாடசாலையும், பயிற்சி நிலையமும் 20-01-92 திங்கட்கிழமை (தைப்பூசத்தினத்தன்று) காலை 9-35 மணிக்குத் தொடங்கவிருக்கின்றன.

அருள்மிகு -செயலாளர்
வாலாம்பிகா சமேத விசுவலிங்க
வைத்தீசுவரசுவாமி திருக்கோயில்
திருவண்ணை நகர்
யாழ்ப்பாணம்.
7-01-92 (2085)

---

## 22ஆவது பிறந்ததினமும்
## 18ஆம்மாத நினைவஞ்சலியும்

ஜனனம் 09-01-1970



மரணம் 05-08-1990

### கப்டன் ஜொனி
(செல்வன் தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்)
(முன்னாள் யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர்)

இன்று இவ்வுலகில் நீர் உதித்த தினம்
உம் நினைவை எம்மிதயத்திடையே நீர்
ஆழப்பதித்து மறைந்ததனால்
மனச் சோகத்திலே தவிக்கின்றோம்
தமிழீழத் தாயகம் வேண்டியே போர்க்
கொடியேற்றி எதிரியின் கோட்டை
மதில்களில் ஏறி எழுந்து நிமிர்ந்தீர்
இருபதிலே போகிறேனென ஏங்கி நீர்
நிற்கவில்லை
ஆயிரம்தான் சென்றாலும்
அழிந்திடுமோ உம் நினைவுகள்.

பலாலி வீதி, பெற்றோர்,
திருநெல்வேலி வடக்கு, சகோதர, சகோதரிகள்,
திருநெல்வேலி. உற்றார், உறவினர்கள்.
(2084)

---

### பாலசுப்பிரமணியம் நினைவு பேருரை

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் அமரர் ந. பாலசுப்பிரமணியம் அவர்களின் நினைவுப் பேருரை யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இன்று மாலை 2.30 மணிக்கு இ. த. ஆ. ச. பொதுச் செயலாளர் த. மகாசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

'யாழ்.குடாநாட்டின்நன்னீர் வளமும் அதனைப் பேணலில் பாடசாலைகளின் பங்கும்' என்னும் விடயம் பற்றி யாழ். பல்கலைக்கழகப்புவியியற்றுறைத் தலைவர் செ. பாலச்சந்திரன் நினைவுப்பேருரைவழங்குவார்

பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் அமரர் பாலசுப்பிரமணியத்தின் உருவப் படத்தைத் திரைநீக்கம்செய்து வைப்பார்.

---

### புதிய

ளர்களுக்கு மட்டுமே அங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதனால் காலை ஏழு மணியுடன் இவர்களுக்கான நம்பர் முடிவடைவதனால் அதன்பின் மிக நீண்ட தூரங்களில் இருந்து சிகிச்சை பெறவரும் பெண் நோயாளர்கள்திரும்பிச்செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மாலை வேளைகளிலும் நோயாளரைப் பார்வையிடுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தினமும் நூறுமுதல் நூற்றிஐம்பது பேர்வரையே சிகிச்சையளிக்கப்படுகிறது.இதனால் நூற்றுக்கணக்கான நோயாளர்மாலையிலும் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது. (ச)

---

### தொண்டா

இதற்கான ஆணையை பாராளுமன்றத் தெரிவுக்குழு வழங்க முடியும் என்றும்,

இதற்கு முன் தொண்டமானின் யோசனைகளை அடிப்படையாக வைத்து பாராளுமன்ற தெரிவுக்குழு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் செல்லச்சாமி கேட்டுள்ளார்.

---

### வவுனியா

இராணுவத்தினர்கைதுசெய்து பேயாடி கூளாம்குளம் இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றிருக்கின்றனர். இவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

---

### இரு காவலரண்கள்

தலின் போது ரீ 56 ரக துப்பாக்கி -1, 303 ரக துப்பாக்கி -1, ரீ 56 ரக துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் -8, 303 ரக ரவைக்கூடு -1, 7.62 நடுத்தர ரவைகள் -1250, 303 ரக ரவைகள் -75 ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர். இம்மோதல் சம்பவத்தை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

---

## வாழ்க்கைத்திறன் கல்வி; உபகரணங்கள் விநியோகம்

யாழ். மாவட்டத்தில் வாழ்க்கைத் திறன் கல்வியை ஆரம்பிக்கவுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான கருவி உபகரணங்கள் முறைசாராக்கல்விப்பிரிவினரால்வழங்கப்படவுள்ளன

இந்த வாழ்க்கைத்திறன் கல்வியை ஆரம்பிக்கவுள்ள பாடசாலை அதிபர்கள் தமக்குத் தேவையான உபகரணங்களை எதிர்வரும் 15-ம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம் என முறைசாராக் கல்விப் பிரிவு அதிகாரி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ச)

### கலந்துரையாடல்

தற்போது பாடசாலை அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக பண்டத்தரிப்புக்கல்விக்கோட்ட அதிபர்களை 10-01-92 வெள்ளிக்கிழமை மு.ப. 09-00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை மண்டபத்திற்கும், மருதனார்மட கல்விக் கோட்ட அதிபர்களை 10-01-92 வெள்ளிக்கிழமை பிற்பகல் 01-00 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்திற்கும், யாழ். கல்விக் கோட்ட அதிபர்களை 11-01-92 சனிக்கிழமை மு. ப. 09-00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திற்கும், வேலணைக் கல்விக் கோட்ட அதிபர்களை 11-01-92 சனிக்கிழமை பி. ப. 02-00 மணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்திற்கும்,

வடமராட்சிக் கல்விக் கோட்ட அதிபர்களை 13-01-92 திங்கட்கிழமைமு.ப. 10-00 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்பெண்கள் பாடசாலை மண்டபத்திற்கும், தென்மராட்சிக் கல்விக் கோட்ட அதிபர்களை 13-01-92 திங்கட்கிழமை பி.ப. 02-30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய மண்டபத்திற்கும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்

---

### அரசு, எதிர்க்கட்சி

புகளுக்கு கூடுதலான அளவு அதிகாரத்தை வழங்குவதன் மூலம் இநனை அடையலாம் இதனை உண்மைப்படுத்தும் வழிவகைகள் மேற்கொண்டு இனப்பிரச்சினையும் தீர்த்து வைக்க தாம் உதவலாம் என்றும்,

பாராளுமன்றத் தெரிவுக்குழு எடுக்கும் எந்த முடிவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படவேண்டும். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளும் குழுக்களும் சமாதானத் தீர்வுக்குத் தமது பங்களிப்பை வழங்க இது உதவியாக இருக்கும். இப்போது எமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு வரலாற்று ரீதியானது இதை நாம் கைநழுவ விட்டால் எமக்கு மற்றொரு சந்தர்ப்பம் கிடைக்காமலும் போகலாம் என்றும் கூறினார்.

பேச்சு வார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் விடுதலைப்புலிகளை வெற்றிகொள்ளவேண்டும் என்ற கருத்தை அவர் கண்டித்தார்.

தோல்வியைத் தழுவிய மக்கள் தம் மீது திணிக்கப்பட்ட ஒரு தீர்வை அவர்கள் ஏற்றுக்கொண்டதாக வரலாறு இல்லை. அவர்கள் கிளர்ச்சி செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்ப்பார்கள். எமக்கு நிரந்தரமான சமாதானம் நாட்டில் வேண்டுமானால் அதற்கான நேரகாலம் இதுதான். புலிகள் தமது ஈழம் கோரிக்கையைக் கைவிட்டு ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தில் இருக்கிறார்கள். நியாயமான தீர்வொன்றை நாம் வழங்கவேண்டும். ஒரு முழுமையான தன்னாட்சித் திட்டத்தை நாம் முன்வைக்க வேண்டும் என்றும்,

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தங்கள் திட்டங்களை மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும் நாம் அப்படிச் செய்யத் தவறும் பட்சத்தில் சிங்கள நாட்டுப் பற்று என்ற போர்வையில் நம்பிக்கையை இழந்த மற்றும் அதிருப்தியடைந்த சக்திகள் மீளவும் முன்னுக்கு வரக்கூடும் என்றார் செல்லச்சாமி.

---

### போரை

புள்ளிவைக்க ஒற்றுமைக்கும் அமைதிக்கும் பாடுபட முன்வாருங்கள் என அச்சபை கோரியுள்ளது.

உள்நாட்டுப் போரில் மக்கள் அல்லல் உறும் போது சரித்திரப் பெருமைபேசுவதால் பயனில்லை எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. அரசாங்ககட்சி, எதிர்கட்சி ஆகியவற்றிடம் கோரிக்கையை இந்த ஆயர்சபை விடுத்துள்ளது.

---

### புலோலி பல நோக்குக்
### கூட்டுறவுச் சங்கம்,
### புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

## பதவி வெற்றிடம்
## பொது முகாமையாளர்

1991. 12.29 ஆம் திகதி ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த மேற்படி பதவிக்குரிய எமது விளம்பரம் சிறுதவறு காரணமாக ரத்துச் செய்யப்படுகின்றது. பின்பு விளம்பரப்படுத்தப்படும்.

தலைவர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்
[சி/3752] 1992.01.04

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.